முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA2 பரீட்சை – 2018 யூலை

## (AA22) கிரயக் கணக்கீடும் அறிக்கையிடலும்

(Cost Accounting and Reporting)

2018-07-22
முற்பகல்
[8.45 – 12.00]

பக்கங்கள் : 09
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) ***விடைகள்*** *யாவும் உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே ஒரு மொழியில்*** *எழுதப்பட வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருப்பின் அவற்றை தெளிவாகக் கூறுக.*

(5) *திட்டமிட முடியாத கணிப்பான்களின் பாவனை அனுமதிக்கப்படும்.*

(6) ***வினா வினைச் சொல்*** *நிரலொன்று அவற்றின்* ***பொருள் வரையறைகளுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு வினா வினைச் சொல்லினை கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் அந்த வினாக்களுக்கான விடைகளை தரப்பட்ட பொருள் வரையறையின் அடிப்படையில் எழுதுதல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

இந்தப் பகுதியிலுள்ள எட்டு (08) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

***1.1*** *முதல்* ***1.5*** *வரையான வினாக்களுக்கு மிகவும் சரியான விடையினை தெரிவுசெய்து, உமது விடைப்புத்தகத்தில் வினாக்களின் இலக்கங்களை ஒன்றன்கீழ் ஒன்றாக ஒழுங்கு வரிசையாக எழுதி அவற்றிற்கு எதிரே தெரிவு செய்த விடை இலக்கத்தினை எழுதுக.*

**1.1** சகல நேரில் (indirect) கிரயங்களினதும் மொத்தமாக அமைவது :

(1) ஆழ்ந்த கிரயம் (Sunk cost) (2) மேந்தலைக் கிரயம் (Overhead cost)

(3) அமையச் செலவு (Opportunity cost) (4) கலப்புக் கிரயம் (Mixed cost)

(02 புள்ளிகள்)

**1.2** கீழ்வருவனவற்றுள் ஒரு கட்டுப்படுத்தக்கூடிய மேந்தலைக் கிரயத்திற்கு உதாரணமாக அமைவது எது?

(1) சேதாரம் (2) பெறுமானத்தேய்வு

(3) தொழிற்சாலை வாடகை (4) ஊழியர் சம்பளம்

(02 புள்ளிகள்)

**1.3** வேலைக் கிரயவியல் (job costing) தொடர்பில் கீழ்வருவனவற்றுள் சரியான கூற்று எது?

(1) எதிர்பார்க்கப்பட்ட கேள்வியின் அடிப்படையில் தொடர்ச்சியான செயன்முறையூடாக மேற்கொள்ளப்படும் உற்பத்தி

(2) உற்பத்தியானது வாடிக்கையாளரின் விவரணங்களுக்கேற்ப உற்பத்தி செய்யப்படுவதில்லை.

(3) ஒவ்வொரு வேலையினதும் கிரயங்களைச் சேகரித்துக் கொள்வதற்கு வேலைக் கிரய அட்டை பயன்படுத்தப்படுகிறது.

(4) உற்பத்திச் செயன்முறை முழுவதிலும் தனது தனித்துவத்தைப் பேணுகின்ற ஒரு தொகுதி ஒத்த விடயங்கள் உற்பத்தி செய்யப்படும். (02 புள்ளிகள்)

**1.4** **வரையறுக்கப்பட்ட ஸ்மார்ட் நிறுவனத்தின்** உருப்படி **M** தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| | **அலகு ஒன்றிற்கு (ரூ.)** |
|---|---|
| விற்பனை விலை | 30 |
| மாறும் கிரயம் | 12 |
| நிலையான கிரயம் | 6 |

மேற்படி தகவல்களின் அடிப்படையில், பங்களிப்பு விற்பனை (C/S) வீதமாக அமைவது :

(1) 20 %. (2) 40 %. (3) 60 %. (4) 10 %.

(02 புள்ளிகள்)

**1.5** எல்லா தொழிற்படு பாதீடுகளினதும் (functional budgets) சுருக்கமாக அமைவது எது?

(1) விற்பனைப் பாதீடு (2) முதன்மைப் பாதீடு

(3) காசுப் பாதீடு (4) உற்பத்திப் பாதீடு (02 புள்ளிகள்)

**1.6** அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள சொற்களிலிருந்து மிகவும் பொருத்தமான சொற்களைத் தெரிவுசெய்து இடைவெளிகளை நிரப்புக. வினா இலக்கங்களை உமது விடைப் புத்தகத்தில் எழுதி அவற்றிற்கு எதிரே தெரிவுசெய்த சொற்களை எழுதுக :

(1) மேந்தலைக் கிரயங்களை, கிரய நிலையங்களுக்கிடையில் ஒரு நியாயமானதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதுமான அடிப்படையில் பகிர்ந்தளிக்கும் செயன்முறையானது ..................... *(ஒதுக்குதல் / பகிர்ந்தளித்தல்)* ஆகும்.

(2) உண்மையான நட்டம் சாதாரண நட்டத்தை விடக் குறைவாக இருப்பின் அது .......... *(அசாதார நட்டம்/ அசாதாரண இலாபம்)* எனப்படுகிறது.

(3) ..................... *(நெகிழும் பாதீடு / பூச்சிய அடிப்படைப் பாதீடு)* என்பது கடந்த காலத்திலான பாதீடு அல்லது உண்மையான பெறுபேறுகளை அடிப்படையாகக் கொள்வதற்குப் பதிலாக ஒவ்வொரு பாதீடும் புதிதாகத் (முதலிலிருந்து) தயாரிக்கப்படுகின்றது. (03 புள்ளிகள்)

**1.7** **நிரல் A** யில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு பதம் தொடர்பாகவும் **நிரல் B** யில் தரப்பட்டுள்ள சரியான சூத்திரத்தை இனங்கண்டு, உமது விடைப் புத்தகத்தில் ஒவ்வொரு பதத்தையும் குறிக்கும் இலக்கத்திற்கு எதிரே சரியான சூத்திரத்தின் ஆங்கில எழுத்தை எழுதுக :

| **நிரல் A** | **நிரல் B** |
|---|---|
| (1) எல்லைக் கிரயம் | (a) விற்பனைப் பெறுமதி – மொத்த மாறும் கிரயம் |
| (2) பங்களிப்பு | (b) விற்பனைப் பெறுமதி – மொத்தக் கிரயம் |
| (3) இலாபம் | (c) மொத்தக் கிரயம் – நிலையான கிரயம் |

(03 புள்ளிகள்)

**1.8** கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் குறிப்பிடுக. உமது விடைப் புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கங்களை எழுதி சரியாயின் **'சரி'** எனவும் தவறாயின் **'தவறு'** எனவும் அவற்றிற்கு எதிரே எழுதுக.

(1) நிறுவனம் ஒன்றின் இலாப நிலையங்களிற்கு மாத்திரமே பாதீடுகள் தயாரிக்கப்படுகின்றன.

(2) பாதீடானது ஊழியர்களின் செயற்றிறனை மதிப்பிடுவதற்குப் பயன்படுகின்றது.

(3) அசாதாரண நட்டங்களானவை எப்பொழுதும் நல்ல உற்பத்தியினால் உறிஞ்சப்படுகிறது.

(4) நிதிக் கணக்கீடானது பிரதானமாக வெளிப் பயனாளர்களுக்கு தகவல்களை அளிப்பதில் கூடிய அக்கறையைக் கொண்டுள்ளது. (04 புள்ளிகள்)

பகுதி *A* முடிவு

## <u>பகுதி B</u>

இந்தப் பகுதியிலுள்ள ஐந்து (05) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 02

"கிரயக் கணக்கீடு மற்றும் நிதிக் கணக்கீடு ஆகியன, ஒரு நிறுவனத்தின் முகாமைக்கு அதன் இலக்குகளை அடைவதற்காக அதனுடைய வியாபார நடவடிக்கைகளை வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் முகாமை செய்வதற்கு உதவுகின்றன என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை".

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) கிரயக் கணக்கீட்டின் நோக்கங்கள் (objectives) இரண்டினை (02) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) நிதிக் கணக்கீட்டிற்கும் கிரயக் கணக்கீட்டிற்குமிடையிலான வேறுபாடுகள் மூன்றினை (03) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

### வினா 03

**வரையறுக்கப்பட்ட XYZ கம்பனி** அதன் உற்பத்திச் செயன்முறையில் **B** எனும் மூலப்பொருளைப் பயன்படுத்துகின்றது. கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் 2018 யூன் மாதத்திற்கான கம்பனியின் ஏடுகளிலிருந்து பெறப்பட்டுள்ளன :

| திகதி | விபரம் | கணியம் (கிலோகிராம்) | கொள்வனவு விலை (ரூ. / கிலோகிராம்) |
|---|---|---|---|
| 01.06.2018 | ஆரம்ப மீதி | 1,000 | 15 |
| 01.06.2018 | கொள்வனவு | 500 | 18 |
| 15.06.2018 | வழங்கல்கள் | 750 | - |
| 24.06.2018 | கொள்வனவு | 200 | 20 |
| 28.06.2018 | வழங்கல்கள் | 800 | - |

**நீங்கள் செய்யவேண்டியது :**

முதல் உள்ளே - முதல் வெளியே (FIFO) அடிப்படையில் 2018 யூன் மாதத்திற்கான களஞ்சியப் பேரேட்டினைத் (stores ledger) **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 04

**ரம்போ PLC** அதனது ஊழியர்களின் ஊதியத்தைக் கணிப்பிடுவதற்கு துண்டு வீத முறைமையைப் (piece rate system) பயன்படுத்துகின்றது. **X, Y** என்னும் இரு ஊழியர்கள் கடந்த வாரத்தில் முறையே 80 மற்றும் 120 அலகுகளை உற்பத்தி செய்திருந்தனர். இரண்டு ஊழியர்களும் கடந்த வாரத்தில் 05 நாட்களிலும் வேலை செய்திருந்தனர்.

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் கம்பனியின் சம்பளப் பட்டியல் முறைமையிலிருந்து பிரித்தறியப்பட்டன :

| | |
|---|---|
| சாதாரண வேலை வாரம் | 9 மணித்தியாலம் x 5 நாட்கள் |
| ஒரு அலகை உற்பத்தி செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட நியம நேரம் | 30 நிமிடம் |
| அலகொன்றிற்கான துண்டு வீதம் | ரூ. 50/- |
| உபகாரப் பணம் (Bonus) | சேமிக்கப்பட்ட நேரத்தின் 50 % இற்கு மணித்தியாலத்திற்கு ரூ. 100/- |

கம்பனியானது வாராந்த அடிப்படையில் ஊழியர்களின் உழைப்பினைக் கணிப்பீடு செய்து கொடுப்பனவை மேற்கொள்கின்றது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

**X** மற்றும் **Y** ஊழியர்களின் கடந்த வாரத்திற்கான மொத்த உழைப்பினை (earnings) வெவ்வேறாகக் **கணிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 05

**வரையறுக்கப்பட்ட ஸ்மார்ட் லைன் தனியார் நிறுவனமானது** சாதாரண உடைகளை உற்பத்தி செய்கின்றது. இந்நிறுவனம் 1,000 அலகுகள் விசேடத்துவமான சாதாரண உடைகளை உற்பத்தி செய்வதற்கான ஒப்பந்தமொன்றை வெளிநாட்டு வாடிக்கையாளரிடமிருந்து பொறுப்பேற்றுள்ளது. இவ் அலகுகளானவை தொகுதி இல. **1010** இல் உற்பத்தி செய்யப்படும்.

கீழ்வரும் தகவல்கள் தொகுதி இல**. 1010** க்காக கம்பனியால் செலவிடப்பட்ட கிரய விபரங்கள் ஆகும்.

| | |
|---|---|
| நேர் மூலப்பொருள் | ரூ. 300,000/- |
| நேர் கூலி – வெட்டுதல் | மணித்தியாலமொன்றிற்கு ரூ. 500/- (1,000 ஊழிய மணித்தியாலங்கள்) |
| நேர் கூலி – பூர்த்திசெய்தல் | மணித்தியாலமொன்றிற்கு ரூ. 120/- (1,500 ஊழிய மணித்தியாலங்கள்) |

கம்பனியின் உற்பத்திப் பிரிவுகளுக்கான மேந்தலை உறிஞ்சல் வீதங்கள் கீழ்வருமாறு :

| **பிரிவு** | **உறிஞ்சல் வீதம்** |
|---|---|
| வெட்டுதல் | ஊழிய மணித்தியாலமொன்றிற்கு ரூ. 25/- |
| பூர்த்திசெய்தல் | ஊழிய மணித்தியாலமொன்றிற்கு ரூ. 60/- |

**நீங்கள் செய்யவேண்டியது :**

**தொகுதி இல. 1010** இன் அலகுக்கான கிரயத்தைக் (cost per unit) **கணிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 06

கீழ்வரும் தகவல்கள் **வரையறுக்கப்பட்ட UKL நிறுவனத்தின்** அடுத்த காலாண்டுடன் தொடர்புபட்டவை ஆகும்.

| | ரூ. |
|---|---:|
| அலகுக்கான விற்பனை விலை | 50 |
| அலகுக்கான பங்களிப்பு | 3 |
| காலாண்டிற்கான நிலையான கிரயம் | 1,500,000 |

நிறுவனமானது அடுத்த காலாண்டில் ரூ. 600,000/- இலாபத்தை உழைப்பதற்கு எதிர்பார்க்கின்றது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

கீழ்வருவனவற்றைக் **கணிக்குக** :

(a) சமப்பாட்டுப் புள்ளி (Break-Even Point) அலகுகளில் (02 புள்ளிகள்)

(b) சமப்பாட்டுப் புள்ளி (Break-Even Point) பெறுமதியில் (01 புள்ளி)

(c) பாதுகாப்பு எல்லை (Margin of safety) அலகுகளில் (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

பகுதி *B* முடிவு

# <u>பகுதி C</u>

இந்தப் பகுதியிலுள்ள மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 07

**பவர் PLC** எனும் உற்பத்தி நிறுவனமானது ஒருங்கிணைந்த கணக்கீட்டு முறைமையைத் தொழிற்படுத்துகிறது.

கீழ்வரும் தகவல்களானவை 2018 யூன் 30 இல் முடிவடைந்த மாதத்திற்கான ஏடுகளிலிருந்து பிரித்தறியப் பட்டன :

| | ரூ. |
|---|---:|
| மூலப்பொருள் கொள்வனவு | 645,000 |
| உற்பத்திக்கு வழங்கப்பட்ட மூலப்பொருள் | 750,000 |
| இயந்திரப் பராமரிப்பு | 95,000 |
| உற்பத்தியின்மீது ஏற்பட்ட நேர் கூலிகள் | 470,000 |
| மேற்பார்வையாளர் சம்பளம் | 90,000 |
| பொறி மீதான பெறுமானத்தேய்வு | 175,000 |
| ஏனைய உற்பத்தி மேந்தலைகள் | 200,000 |
| முடிவுப் பொருட்களுக்கான உற்பத்திக் கிரயம் | 1,500,000 |
| விற்கப்பட்ட பொருட்களுக்கான உற்பத்திக் கிரயம் | 1,250,000 |

2018 யூன் 01 ஆந் திகதியிலான இருப்பு மீதிகள் கீழ்வருமாறு :

| | ரூ. |
|---|---:|
| மூலப்பொருட்கள் | 550,000 |
| புத்துருவாகும் வேலை (WIP) | 280,000 |
| முடிவுப்பொருட்கள் | 150,000 |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

கீழ்வரும் கணக்குகளைத் **தயாரிக்குக** :

(a) மூலப்பொருள் இருப்புக் கட்டுப்பாட்டுக் கணக்கு (02 புள்ளிகள்)

(b) புத்துருவாகும் வேலை (WIP) கட்டுப்பாட்டுக் கணக்கு (04 புள்ளிகள்)

(c) முடிவுப்பொருள் கட்டுப்பாட்டுக் கணக்கு (02 புள்ளிகள்)

(d) உற்பத்தி மேந்தலைகள் கட்டுப்பாட்டுக் கணக்கு (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 08

**வரையறுக்கப்பட்ட பார்மா லங்கா நிறுவனமானது** அடுத்தடுத்த இரு செயன்முறைகளின் மூலம் **P** என்ற பொருளை உற்பத்தி செய்கின்றது. செயன்முறை **I** இன் வெளியீடானது உடனடியாக **செயன்முறை II** இற்கு மாற்றீடு செய்யப்படுகின்றது.

**செயன்முறை I** தொடர்பான 2018 யூன் மாதத் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| **செயன்முறை I** இற்கு உட்படுத்திய நேர் மூலப்பொருள் | ரூ. 1,250,000/- (125,000 அலகுகள்) |
| நேர் கூலி | ரூ. 800,000/- |
| உற்பத்தி மேந்தலைகள் | ரூ. 550,000/- |
| சாதாரண இழப்பு | 10% மான உள்ளிடப்பட்ட பொருட்கள் மற்றும் ஒடிவு உருப்படிகள் ஒரு அலகு ரூ. 10/- வீதம் விற்கப்படலாம். |
| **செயன்முறை II** இற்கு மாற்றீடு செய்யப்பட்ட வெளியீடுகள் | 110,000 அலகுகள் |

ஆரம்ப மற்றும் இறுதி புத்துருவாகும் வேலைகள் எதுவும் இருக்கவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியது :**

**செயன்முறை I** கணக்கினைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 09

**வரையறுக்கப்பட்ட NWL** கம்பனியானது **B01** மற்றும் **C02** எனும் இரண்டு பொருட்களை உற்பத்தி செய்கின்றது. இது **BM01** மற்றும் **IM02** எனும் இரண்டு உற்பத்திப் பிரிவுகளையும் **S01** மற்றும் **S02** எனும் இரண்டு சேவைப் பிரிவுகளையும் கொண்டுள்ளது :

2018 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த அரையாண்டு காலப்பகுதிக்கான பாதிடப்பட்ட தகவல்கள் கீழ்வருமாறு:

| | **உற்பத்திப் பிரிவுகள்** | | **சேவைப் பிரிவுகள்** | |
|---|---|---|---|---|
| | **BM01** | **IM02** | **S01** | **S02** |
| நேரில் கூலிகள் (ரூ.) | 1,000,000 | 1,000,000 | 300,000 | 500,000 |
| நேரில் பொருட்கள் (ரூ.) | 500,000 | 805,000 | 200,000 | 100,000 |

ஏனைய மேந்தலைகள் :

| | **ரூ.** |
|---|---|
| பெறுமானத்தேய்வு | 1,500,000 |
| கட்டடத்தின் மீதான காப்புறுதி | 375,000 |
| கட்டட வாடகை | 750,000 |
| ஊழியர் சேமநலன் | 425,000 |

கிடைக்கப்பெற்ற ஏனைய தகவல்கள் கீழ்வருமாறு :

| | உற்பத்திப் பிரிவுகள் | | சேவைப் பிரிவுகள் | |
|---|---|---|---|---|
| | **BM01** | **IM02** | **S01** | **S02** |
| இயந்திரத்தின் புத்தகப் பெறுமதி (ரூ.) | 8,000,000 | 5,000,000 | 1,000,000 | 1,000,000 |
| கட்டட நிலப்பரப்பு (சதுர அடி) | 10,000 | 15,000 | 5,000 | 7,500 |
| ஊழியர் எண்ணிக்கை | 150 | 150 | 50 | 75 |
| பாதீடு செய்யப்பட்ட இயந்திர மணித்தியாலம் | 18,000 | 18,000 | - | - |
| சேவைப் பிரிவுகளுக்கான கிரயப் பகிர்வு: | | | | |
| **S01** | 40% | 60% | - | - |
| **S02** | 70% | 30% | - | - |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) மேந்தலைகள் எவ்வாறு ஒதுக்கப்பட்டு ஒவ்வொரு உற்பத்திப் பிரிவுக்கும் பகிரப்படும் என்பதைக் காட்டும் கூற்றினைத் **தயாரிக்குக.** (08 புள்ளிகள்)

(b) பாதீடு செய்யப்பட்ட இயந்திர மணித்தியாலத்தின் அடிப்படையில் ஒவ்வொரு உற்பத்திப் பிரிவுக்கும் பொருத்தமான மேந்தலை உறிஞ்சல் வீதங்களைக் **கணிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

பகுதி *C* முடிவு

## <u>பகுதி D</u>

இப்பகுதியிலுள்ள ஒரே வினாவுக்கு விடை தருக.

(25 புள்ளிகள்)

### வினா 10

(A) **வரையறுக்கப்பட்ட லங்கா ஹாட்வெயார்** ஆனது **பொருள் A** ஐ உற்பத்தி செய்கின்றது. கம்பனியானது 2018 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான பாதீட்டினைத் தயாரிக்கின்றது.

கீழ்வரும் தகவல்கள் 2018 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான கம்பனி ஏடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டன :

(1) காலாண்டிற்காக மதிப்பிடப்பட்ட விற்பனை 15,000 அலகுகள் ஆகும். பாதீட்டைத் தயாரிப் பதற்குப் பயன்படுத்த வேண்டிய ஏனைய எதிர்வுகூறப்பட்ட தகவல்கள் கீழ்வருமாறு :

| | |
|---|---|
| அலகுக்கான விற்பனை விலை | ரூ. 500/- |
| ஆரம்ப இருப்பு | 750 அலகுகள் |
| இறுதி இருப்பு | 1,550 அலகுகள் |

(2) **பொருள் A** யின் ஒரு அலகிற்காக மதிப்பிடப்பட்ட நேர் மூலப்பொருளின் அளவு 2.5 கிலோகிராம் என்பதுடன் நேர் மூலப்பொருள் தொடர்பான ஏனைய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| கிலோகிராமிற்கான விலை | ரூ. 60/- |
| ஆரம்ப நேர் மூலப்பொருள் இருப்பு | 10,000 கி.கிராம் |
| இறுதி நேர் மூலப்பொருள் இருப்பு | 6,250 கி.கிராம் |

(3) **பொருள் A** யின் ஒவ்வொரு அலகிற்கும் 3 ஊழிய மணித்தியாலம் தேவைப்படுவதுடன் ஊழிய மணித்தியால வீதம் ரூ. 50/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

2018 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த காலாண்டிற்காகப் பின்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) விற்பனைப் பாதிடு

(b) உற்பத்திப் பாதீடு

(c) மூலப்பொருள் பாவனை பாதீடு

(d) மூலப்பொருள் கொள்வனவு பாதீடு

(e) நேர் கூலிக் கிரயப் பாதீடு (02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

**(B)** (a) நியமக் கிரயமிடல் (standard costing) மற்றும் பாதீடிடல் (budgeting) இரண்டும் ஒரு வியாபார நிறுவனத்தின் திட்டமிடல், செயற்பாடு மற்றும் கட்டுப்பாடு என்பவற்றின் முக்கியமான கருவிகளாகும்.

நியமக் கிரயமிடல் மற்றும் பாதீடு ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் மூன்றினை (03) **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட FP கம்பனியானது பொருள் X** இனை உற்பத்தி செய்வதுடன் நியமக் கிரயமிடல் முறையைப் பயன்படுத்துகின்றது. கீழ்வரும் தகவல்கள் 2018 யூன் மாதத்திற்குரியன வையாகும் :

(1) **உற்பத்திப் பொருள் X** இன் நியமக் கிரய அட்டை கீழ்வருமாறு :

| | | **அலகொன்றிற்கான கிரயம் (ரூ.)** |
|---|---|---|
| நேர் பொருள் | 5 லீற்றர் (லீற்றர் ரூ. 250/- வீதம்) | 1,250 |
| நேர் கூலி | 4 மணித்தியாலம் (மணித்தியாலத்திற்கு ரூ.125/- வீதம்) | 500 |
| மாறும் மேந்தலைகள் | 3 மணித்தியாலம் (மணித்தியாலத்திற்கு ரூ.150/- வீதம்) | 450 |
| நிலையான உற்பத்தி மேந்தலைகள் | 4 மணித்தியாலம் (நேர் கூலி மணித்தியாலத்திற்கு ரூ. 450/- வீதம்) | 1,800 |
| **மொத்தம்** | | **4,000** |

(2) யூன் மாதத்திற்கான பாதிடப்பட்ட நிலையான உற்பத்தி மேந்தலைகளானது ரூ. 280,000/- ஆகும்.

(3) 2018 யூன் மாதத்தின்போது கம்பனியானது முடிவுப் பொருட்களின் 400 அலகுகளை உற்பத்தி செய்ததுடன் மாதத்திற்கான உண்மைக் கிரயம் கீழே தரப்படுகிறது :

| | **ரூ.** |
|---|---|
| கொள்வனவு செய்யப்பட்டு உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட நேர் பொருட்கள் (2,050 லீற்றர்) | 502,250 |
| செலுத்தப்பட்ட நேர் கூலி மணித்தியாலம் (1,500 மணித்தியாலம்) | 225,000 |
| நிலையான உற்பத்தி மேந்தலைகள் | 300,000 |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

கீழ்வரும் முரண்களைக் (variances) **கணிக்குக**:

(i) நேர் பொருள் விலை முரண் (Direct Material Price Variance)

(ii) நேர் பொருட் பாவனை முரண் (Direct Material Usage Variance)

(iii) நேர் பொருட் கிரய முரண் (Direct Material Cost Variance)

(iv) நேர் கூலி வீத முரண் (Direct Labour Rate Variance)

(v) நேர் கூலி வினைத்திறன் முரண் (Direct Labour Efficiency Variance)

(vi) நிலையான உற்பத்தி மேந்தலைகளின் செலவின முரண் (Fixed Production Overheads Expenditure Variance) (02 புள்ளிகள் வீதம், 12 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

பகுதி *D* முடிவு

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |